முருகப்பெருமான் துணை

**மகான் உருத்திரபசுபதி நாயனார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

06.02.2023, திங்கட்கிழமை

1. தவசியே மாதரும சேவை வழி
தரணியில் மாற்றம் நிகழ்த்த
அவதாரம் எடுத்த அரங்கனே
அண்ணலே உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது கலைதிங்கள்
குறைவிலா மூவேழீர் திகதி சோமவாரம்
(சுபகிருது வருடம் தை மாதம் 23 ம் நாள் 06.02.2023, திங்கட்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு உருத்திரபசுபதிநாயனார் யானும்
3. யானுரைப்பேன் உலகநலம் பெற
உண்மைபட உயர் சேவைதனை
ஞானமாக தவமாக அருளும்
ஞானியர் வழிகளை பின்பற்றிவர
4. வருகவே மக்களிடை மாற்றம்
வந்தடையும் சர்வபலமாக
தருமகுணமும் தயவும் கூடி
தரணியில் ஞானபலமுடன் தரும பலமும்
5. பலமும் கொண்ட மக்களாய் தேறி
பாருலகில் ஆற்றல் பெறுவர்
சலனமற மாயைகளை கடந்து
சங்கடமில்லா வாழ்வு காண்பர்
6. காண்கவே அரங்கமகானை
கண்டனுகி தீட்சை ஆசிபெற
ஆன்மீக ஞானவழி நிலைகூடி
அறிவுத் தெளிவு திடம் கண்டு
7. கண்டுமே பிறவி நோக்கமுடன்
கடைத்தேற உண்டான வழிதனை
தொண்டினால் அடைய முடியுமெனும்
திடம் சிந்தை கண்டடைந்து
8. அடைந்து சன்மார்க்க வழியை
அகலா தரும சேவை ஆற்றி
தடையற தான்பெற்ற பயனை
தரணியில் மற்றவரும் அடைய
9. அடையவே தக்க வழிகாட்டி
அனைவரும் ஞானிகளாகும்
தடையிலா வாய்ப்பு ஆற்றலை
தவராஜன் அனுகூலமாக அடைவர்

10. அடையவே இந்திவித மாற்றம்
அகிலம் எங்கிலும் நடந்துமே
தடையின்றி உலக மாற்றமும்
தவராஜன் வந்த நோக்கமாக

11. ஆகவே நிறைவேறி இனிதே
ஆளுமை ஞான ஆட்சியாக
வகைபட ஞானத்தலைமையாக
வையகம் கண்டுத் தேறும்

அனுகூல ஆசி முற்றே

–சுபம்–